பதிவு எண்: M. 6311 ★ தொலைபேசி: 51331 ★ நிறுவியது: 1953 ★ விலை: 7 காசு ★ இலங்கையில் 10 சதம்

நம்நாடு

The 'Nam Nadu' — A Tamil Daily
The Official Organ of the D. M. K.

ஆசிரியர்: இரா. செழியன் எம்.ஏ., எம்.பி.

மலர்: 15] சென்னை: ஐப்பசி 2௳ (19–10–67) வியாழன் வெளியூர்: ஐப்பசி 3௳ (20—10—67) வெள்ளி [இதழ்: 105

மக்களின் தீர்ப்பை மாற்ற முயல்வது ஏன்?

6-மாதத்தில் நல்லவராகி விட்டனரா?

காங்கிரசாரின் கனவு பலிக்கப் போவதில்லை

தேனாம்பேட்டைக் [illegible]டத்தில் அண்ணா தெளிவுரை

சென்னை, அக் 19—

"20 ஆண்டுகாலமாகக் காங்[illegible]க்காரர்கள் இந்த நாட்டை ஆண்டார்கள்! வடக்கே மணிப்பூரிலிருந்து தெற்கே[illegible] கோ[illegible] வரையில் அரசாண்டார்கள்—கொடி கட்டி! எதிர்தரப்பில், 'ஏன் என்று கேட்டு[illegible] ஆள் இல்லாமல் அரசாண்டார்கள்!

"ஆனால், இந்த 20 ஆண்டு ஆட்சியில் மேலைநாடுகளுடன் நம் நாட்டை ஒப்பிட்டுப் பார்க்கும்படி என்ன செய்தார்கள்? எந்தக் கஷ்டத்தை நீக்கினார்கள்? எல்லோருக்கும் வீடு கிடைத்ததா? உணவு வயிறாரக் கிடைத்ததா? வேலை அனைவருக்கும் கிடைத்ததா? பண்டங்களை வாங்கத்தக்க கூலி தரப்பட்டதா?

"20 ஆண்டுக்காலத்தில் மூன்று ஐந்தாண்டுத் திட்டங்களைப் போட்டு—20 ஆயிரம் கோடி ரூபாய் செலவழித்த பிறகும், தேர்தலில் மக்கள் என்ன சொன்னார்கள்?—நீங்கள் கொஞ்சம் பதவியிலிருந்து இறங்குங்கள்; அவர்கள் அரசாளட்டும்' என்று கூறினார்கள்? அந்தத் தீர்ப்பை ஏன் இப்போது மாற்ற வேண்டும்?

"ஆறு மாத காலத்தில் நாங்கள் அக்கிரமம் செய்திருந்தால் — ஆகாத காரியம் புரிந்திருந்தால்—ஆர்ப்பாட்டம் செய்திருந்தால்—அந்தஸ்துகளை உயர்த்திக்கொண்டிருந்தால்—சொந்த இலாபத்திற்குப் பதவியைப் பயன்படுத்தியிருந்தால்—சுயநலத்தைப் பெருக்கியிருந்தால் குறை கூறலாம்; ஆனால் மக்கள், எந்தவிதமான குறையையும் எங்களிடம் காணவில்லையே!"

என்று. முதலமைச்சர் அறிஞர் அண்ணா அவர்கள், நேற்று தேனாம்பேட்டையில் நடந்த தேர்தல் பிரசாரப் பொதுக்கூட்டத்தில் பேசுகையில் சுட்டிக்காட்டிக் குறிப்பிட்டார்கள்.

எம். ஜி. ஆர். படிப்பகச் சார்பில் தேனாம்பேட்டை திருவள்ளுவர் சாலையில் நடைபெற்ற இந்தக் கூட்டத்துக்குத் தோழர் தேவேந்திரன் தலைமைவகித்தார்.

தோழர்கள் நடேசன், ஏழுமலை, வெள்ளை, ஆதிகேசவன், சுந்தரம், ஜெயமாறன், நாகராசன், லோகநாதன், நீலகண்டன், துரை, இளமதி, முன்னாள் மேயர் எஸ் கிருஷ்ணமூர்த்தி, வ. புருடோத்தமன் எம்.சி., வை. பாலசுந்தரம், இளங்கோ, மாநகராட்சிக் குழுத் தலைவர் இரா. சடகோபன், முகவை மாவட்டச் செயலாளர் எஸ். எஸ். தென்னரசு ஆகியோர் பேசினர்.

அண்ணா அவர்கள் மேலும் பேசியதாவது:—

"நாம் என்ன சொல்லி ஓட்டுக் கேட்க வேண்டும் என்பதைத் தான் இன்று கூறப்போகிறேன். 'மாறன் படித்தவர்; இளைஞர்; நாடாளுமன்றத்திற்கு அவர் சென்றால், புது வலிவு நமக்கு ஏற்படும்' என்று கூறவேண்டும்.

அத்துடன், வாக்காளர்களைப் பார்த்து ஒன்று கேட்க வேண்டும்; 'ஆறு மாதத்திற்கு முன்பு காங்கிரசுக் கட்சியை வீழ்த்தினீர்கள்; இங்கு மட்டுமல்ல-வங்காளத்தில் வீழ்த்தினீர்கள்; பாஞ்சாலத்தில் படுதோல்வி அடையச் செய்தீர்கள்; ஒரிசாவில் ஒழித்துக் கட்டினீர்கள்; பீகாரில் பின்னடையச் செய்தீர்கள்; கேரளத்தில் கவிழ்த்தீர்கள்; அரியானாவில் அடியோடு நீக்கினீர்கள்; அப்படிப்பட்ட காங்கிரசார், இந்த ஆறு மாதத்திற்குள் எதிலே நல்லவர்களாகி விட்டார்கள் – வல்லவர்களாகி விட்டார்கள்? அவர்கள் காட்டுகிற பட்டியல் என்ன?

20 ஆண்டுக்காலமாகக் காங்கிரசார் செய்த அநீதிகளை–அக்கிரமங்களை—போட்ட வரிகளை—நடத்திய ஊழல் நிர்வாகத்தை—அதனால் ஏழை மக்கள் புழுப்போல் துடித்ததை எடுத்துச் சொல்லித தோற்கடித்தீர்கள்! இந்த ஆறு மாத காலத்திற்குள் அந்த 'அக்கிரமமும் அநீதியும் மாறிவிடுமா? 20 ஆண்டுக்காலமாக அவர்கள் ஏற்படுத்திய அல்லலை நீக்கிவிட முடியுமா? ஒவ்வொரு வாக்காளரும் இதை எண்ணிப் பார்த்திடச் செய்ய வேண்டும்.

முன்பு தெளிவில்லாமல் ஓட்டுப் போட்டது உண்மையாக இருந்தால் அல்லது பக்தவத்சலம் கூறியதுபோல் போதையில் ஓட்டுப் போட்டது உண்மையென்றால், இப்போது அந்தப் போக்கை-முடிவை மாற்றிக் கொள்வது சரி!

விவரம் தெரியாமல்—விளக்கம் இல்லாமல்—காரணம் அறியாமல் எங்கள் பேச்சில் மயங்கி ஓட்டுப் போட்டிருந்தால், இப்போது மாற்றிக் கொள்ளலாம்!

யாரோ, அண்ணாதுரையின் பேச்சில் மயங்கி ஓட்டுப்போட்டு விட்டதாகக் கூறினார்களாம்! அவர்கள் பேசுவது உண்மை என்றால்—எங்கள் பேச்சில் மயங்கி ஓட்டுப் போடுவது உண்மையென்றால், இந்த முறையும் அந்தப் பேச்சில் அந்த மயக்கம் ஏற்பட்டுத்தானே தீரும்? அந்தப் பேச்சுக்கு — மயக்கத்திற்கு என்ன மருந்து வைத்திருக்கிறீர்கள்?

அந்த மருந்து, 'இரவில் வாக்காளர்களைச் சந்திப்பது என்று இப்போது காங்கிரசுக்காரர் கண்டிருக்கிறார்கள்!

காங்கிரசுக்காரர்கள் கனவுகாண்பதுபோல, அர்த்த இராத்திரியிலே யக்களை அவர்களால் சந்திக்க முடியும்!

ஆனால், எந்த அளவுக்கு ஏழையாக இருந்தாலும், ஓட்டுக்காக எனது நண்பர்கள் கை நீட்டிப் பணம் வாங்கமாட்டார்கள்!

அப்படியே சிலர் வாங்கினாலும், அந்தப் பணத்தில் பாதியை எனக்கு நிதியாகத் தந்துவிட்டு ஓட்டையும் எனக்குத்தான் போடுவார்கள்; சென்ற முறை நடந்த தேர்தலிலிம் அதைத்தானே கண்டேன்!

சென்ற முறை, காங்கிரசுக்காரர்களிடம் பணமா இல்லை?

இந்த முறை நடக்கும் தேர்தலிலும் அவர்களுக்கு அதில் குறை இருக்காது; ஆனால், ஆட்சி அவர்களிடம் இல்லாததால், அவர்களது ஆர்ப்பரிப்புக் குறைந்திருக்கிறது!

முன்பு தெருக்கோடியில்—தேர்தல் நேரத்தில் — காங்கிரசுக்காரர் வருகிறார் என்றால், பசித்தவன்கூட, 'அப்பாடா! வருகிறார் காங்கிரசுக்காரர்! என்று மகிழ்ச்சியடைவான்!

அந்த அளவுக்குப் பணமிருந்தும் வெற்றி பெற்றவர்கள் யார்?

அப்படியிருந்தும், அந்தத் தேர்தலில் வெற்றிபெற்ற நாங்கள் என்ன — இலட்சாதிபதிகளாக தோல்வி கண்ட அவர்கள், என்ன—பிட்சாபாத்திரம் ஏந்தியவர்களா?

அவர்கள் கட்சியில் நின்ற ஜமீன்தாரர்களும் மிட்டாதார்களும், பட்டக்காரர்களும், பாளையங்காரர்களும்தானே தோற்றார்கள்? காமராசரேகூட அல்லவா தோற்றார்! அதை நினைக்கிறபோதே நெஞ்சம் நடுங்குகிறதே!

20 ஆண்டுகளாக ஆண்ட காங்கிரசைப் பார்த்து, 'நீ வேண்டாம்' என்று கூறிய மக்கள், மறுபடியும் அதற்கு ஆதரவு தருவார்களா?

சட்டம்—அமைதி போனது எப்படி?

"காங்கிர[illegible]லில் ஒரு[illegible]சட்டம் போச்சு --- அமைதி போச்[illegible] --- ஒ[illegible]றார்கள்! ஐ. ஜி.-யிலிருந்து கான்ஸ்டபிள் [illegible]யுள்ள [illegible]க்கு 20 ஆண்டுகளாக அவர்கள் [illegible]யிற்சி தந்தார்கள்? அதனை நான், ஏழு மாதத்தில் மாற்ற[illegible]முடியுமா?

"உண்மை[illegible]ன்; சட்டம் இதுவரையில், காங்கிரசார் வீட்டில் கிடந்தது! [illegible]அது இனிமேல் நடக்காது; போலீசுத்துறை இதுவரையில், அவர்க[illegible] சொன்னபடி ஆடியது; அது இனிமேல் அப்படி நடக்காது! எது[illegible] நியாயப்படி நடக்க வேண்டுமோ, அது நடக்கும்; அதனால்தான் [illegible]ங்கிரசுக்காரர்கள், 'சட்டம் போச்சு --- அமைதி போச்சு' என்று கூறு[illegible]றார்கள்!"

---அறிஞர் அண்ணா

(தேனாம்பேட்டைக் கூட்டத்தில்)

சேரணியினர் கால்வாய் வெட்டும் பணி

அறிஞர் அண்ணா பார்வையிட்டு பாராட்டினர்

சென்னை, அக். 19—

சென்னைச் சேரணியினர், வியாசர்பாடி கல்யாணபுரத்தில் மேற்கொண்டுள்ள மழை நீர் வடிகால் வெட்டும் வேலை, இரவு—பகலாகத் தொடர்ந்து நடைபெற்று வருகிறது.

நேற்று மாலை அறிஞர் அண்ணா அவர்கள், இப்பணியினைப் பார்வையிட்டார்.

அண்ணா அவர்களுடன் பெ. சீனிவாசன் எம்.எல்.ஏ., கஜேந்திரன் ஆகியோரும் வந்திருந்தனர்.

கால்வாய்த் தலைப்பிலிருந்து இதுவரை வெட்டப்பட்டுள்ள கால்வாயை நடந்தே வந்து பார்வையிட்டார்கள். வட சென்னைச் சேரணிச் செயலாளர் சு. பாலன், சேரணித் தொகுதித் தலைவர்களான டில்லிராஜ், மணிவண்ணன், எத்திராஜ், மாநகராட்சி உறுப்பினர் அன்பிற்கரசன் ஆகியோர் அண்ணா அவர்களை வரவேற்று, இதுவரை நடந்திருக்கும் பணிகளை எடுத்துரைத்தனர்; பணியில் ஈடுபட்டுள்ள தொண்டர்களையும் தாய்மார்களையும் அண்ணா அவர்கட்கு அறிமுகப்படுத்தி வைத்தனர்.

பின்னர், சுலூஸ் பாதிரியார் அவர்களால் கண்காணிக்கப்படும் தொழுநோய் விடுதித் தோழர்கள் கால்வாய் வெட்டும் பணியில் ஈடுபட்டிருப்பதைப் பார்வையிட்டு அவர்களுடன் சிறிது நேரம் அளவளாவி, பாராட்டுத் தெரிவித்துக்கொண்டார்கள்.

சேரணியினரையும் பாராட்டி விடைபெற்றுக் கொண்டார்கள்.

கல்வியில் ஆங்கிலத்துக்குரிய இடம்

டாக்டர் ஏ. இராமசாமி கருத்து

சென்னை, அக். 18—

"கல்வி முறையில் ஆங்கிலத்திற்குக் கொடுக்கப்படும் இடம் பற்றிய மாநாடு, நமது கல்விக்கூடங்களில் ஆங்கிலப் படிப்புக்குத் தரவேண்டிய இடம் பற்றி மட்டுமே ஆய்வு செய்யும். பயிற்றுமொழி, நாட்டு மொழித் தொடர்பான எல்லா அரசியல் தகராறுகளையும் இதில் கொணர்ந்து கலக்கக்கூடாது.

"விஞ்ஞானம், தொழில் நுட்பம், மனோதத்துவம், பொறியியல் போன்ற துறைகளில் போதுமான அறிவைத் தரும் அந்நிய மொழியை நம்முடைய மாணவர்கள் கற்றறிந்துகொள்ள வேண்டுமென்பதில் தான் எனக்கு அக்கறை"

என்று கல்விமுறையில் ஆங்கிலம் பற்றிய குழுத் தலைவர் டாக்டர் ஏ. இராமசாமி (முதலியார்) செய்தியாளர்களிடம் கூறினர்.

மீண்டும் மிஜோ மாநிலக் கோரிக்கை

அய்ஜால், அக். 19—

"இந்திய யூனியனுக்குள் அடங்கியதாக உள்ள மிஜோ சுயாட்சி மாநிலம் ஒன்றை அமைக்க வேண்டும்" என்று, அமைதிக் குலைவுக்குள்ளான மிஜோ மாவட்டத்தின் ஆளுங் கட்சியான மிஜோ யூனியன் கட்சி வற்புறுத்தியுள்ளது.

அக்கட்சியின் சிறப்பு மாநாடு இங்கு நடைபெற்றது. மிஜோ மாவட்டத்தில் ஆயுதப் புரட்சியைத் தூண்டி, நாசவேலைகளில் ஈடுபட்டதும், பிரிவினைப் போக்குக் கொண்டதுமான மிஜோ தேசிய முன்னணிக்கு அம்மாநாட்டில் கண்டனம் தெரிவிக்கப்பட்டது.

மிஜோ வட்டாரத்தில் சட்ட விரோதச் சம்பவங்கள் நீடிப்பது குறித்து அம்மாநாடு கவலை தெரி

(4-ம் பக்கம் பார்க்க)

நம் நாடு
இரா. செழியன்
திருவள்ளுவராண்டு 1998 ஐப்பசி 2 (19—10—67) வியாழன்

தென் சென்னை இடைத் தேர்தல்

தென் சென்னை நாடாளுமன்ற இடைத் தேர்தல், அடுத்த திங்கள் ஏழாம் நாள் நடைபெறவிருக்கிறது. இந்த இடைத் தேர்தலில் எழுவர் வேட்பாளர்களாகப் போட்டியிடுகின்றனர்.

உண்மையான போட்டி, நமது முன்னேற்றக் கழகத்துக்கும்—காங்கிரசுக் கட்சிக்கும் இடையேதான்; மற்ற ஐவரும் போட்டியிடுகின்றனர் என்பதில் அரசியல் முக்கியத்துவம் எதுவுமில்லை.

முன்னேற்றக் கழகத்தின் சார்பில் 'முரசொலி' ஆசிரியர் மாறன் அவர்கள் வேட்பாளராக நிறுத்தப்பட்டுள்ளார்.

மாறன் அவர்கள் இளைஞர் என்றாலும், சிறந்த எழுத்தாளர்; செயலாற்றும் திறம் படைத்தவர்; சுறுசுறுப்பாக இயங்கும் இயல்பு பெற்றவர்.

தாய் மொழியையும், ஆங்கில மொழியையும் நன்கு கற்றிருப்பவர்; எம்.ஏ. பட்டம் பெற்றிருப்பவர்; இவை அனைத்துக்கும் மேலாக, தமிழ் மக்கள் நல்வாழ்வுக்கு ஏற்ற வகையில் இடையறாது உழைக்க உறுதி பூண்டிருப்பவர்.

காங்கிரசு வேட்பாளராக சி.ஆர். இராமசாமி அவர்கள் நிறுத்தப்பட்டிருக்கின்றார். அவர், கழக வேட்பாளர் மாறன் அவர்களைப் போலல்லாமல், ஏற்கனவே பலமுறை தேர்தலில் ஈடுபட்டிருக்கின்றார்.

1962-ல் நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தலில், இதே தென் சென்னைத் தொகுதியில் நின்று, கழக வேட்பாளரான நாஞ்சில் மனோகரன் அவர்களிடம் வெற்றி வாய்ப்பைப் பறிகொடுத்தவர்.

காங்கிரசு வேட்பாளர் பெற்றிருக்கின்ற தேர்தல் வெற்றி—தோல்விகளைக் கொண்டு, அவர் பெற்றிருக்கக்கூடிய தேர்தல் பணி பற்றிய அனுபவத்தின் அளவை, நாம் புரிந்துகொள்ள வேண்டும். அப்பொழுதுதான், அவர் இப்பொழுது மேற்கொள்ளக்கூடிய தேர்தல் பணிகளை முறியடிக்கக்கூடிய செயல் முறைகளை கழகத் தலைவர்களால் மேற்கொள்ள முடியும்.

தமிழக ஆட்சிப் பொறுப்பை நமது முன்னேற்றக் கழகம் ஏற்றுக்கொண்டு ஏழு திங்கள்தான் ஆகிறது.

ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக்கொண்ட இந்தக் குறைந்த காலத்துக்குள்ளாகவே, தனது அரும் சாதனைகள் மூலம் சென்னை நகர மக்களின் நன்னம்பிக்கையையும் நல்லாதரவையும், கழக அரசு பெற்றிருக்கிறது என்பது, இயல்பாக உள்ள பற்றுதல் காரணமாகக் கூறப்படுவதல்ல.

சென்ற ஆண்டு இதே திங்களில், காங்கிரசுக் கட்சியின் கையில்தான் தமிழக ஆட்சிப் பொறுப்பு இருந்துவந்தது. அப்பொழுது, தங்கள் அன்றாட அரிசித் தேவைக்குப் பட்டுவந்த அல்லலையும், இன்று கழக ஆட்சியில் அந்த அல்லல் பறக்கடிக்கப்பட்டிருப்பதையும் நகர மக்கள் அறியாதவர்கள் அல்லர்.

அன்று நகர உணவுப் பங்கீட்டுக் கடைகளில் தங்களுக்கு உரிய அரிசியைப் பெறுவதற்காக மணிக்கணக்கில் கால் கடுக்க நின்றிருந்ததும், அப்படி நின்றிருந்தாலும் அரிசி பெற முடியாமல் ஏமாற்றத்துடன் பலர் வீடு திரும்பியதும் பசுமையாகவே இப்பொழுதும் நகர மக்கள் உள்ளங்களில் இருக்கத்தான் செய்யும்.

இன்றைய நிலை அதுவா? தங்கள் அரிசித் தேவையை எப்பொழுதும் பெற்றுக்கொள்ளக்கூடிய நிலையில் அல்லவா, இன்று உணவுப் பங்கீட்டுக் கடைகளில் எப்பொழுதும் அரிசி கையிருப்பில் இருந்துவருவதை நகர மக்கள் அனுபவித்து வருகின்றனர்!

இது எப்படிச் சாத்தியமாயிற்று? உணவுத் துறையில் ஏற்பட்டிருக்கின்ற இப்பெரிய மாற்றத்தை உருவாக்கியது எது?

அன்றையக் காங்கிரசு ஆட்சி, அரசியல் காரணத்துக்காகக் கொள்முதலைத் தளர்த்தியது; நகர மக்களின் அரிசித் தேவையைப் பூர்த்தி செய்யத் தான் ஏற்றுக்கொண்டிருந்த பொறுப்பைத் தட்டிக்கழித்தது.

ஆனால் இன்றோ, கழக அரசு, தனக்குள்ள பொறுப்பை உணர்ந்து, உணவுத் துறையில் நகர மக்களுக்கு ஆற்றிவர வேண்டிய கடமையைச் சீராக நிறைவேற்றி வருகிறது.

கொள்முதல் செய்வதில் தாட்சண்யம் பார்ப்பதில்லை; 'கொள்முதல் செய்வதில் தாட்சண்யமும் தயக்கமும் காட்டினால், சென்னை நகர மக்கள் அல்லலுக்கு உள்ளாவரே' என்ற கவலையும் மனிதாபிமானமும் கழக அரசுக்கும், குறிப்பாக முதல்வர் அறிஞர் அண்ணா அவர்களுக்கும் நிரம்ப இருக்கிறது.

எனவேதான், கொள்முதலை செம்மையாகவும், தீவிரமாகவும் கழக அரசு செய்துவருகிறது; அதே நேரத்தில், தேவைக்கு மிகுதியான அரிசியை சென்னைக்குக் கொண்டுவந்து கையிருப்பு வைப்பதிலும் கருத்தாகச் செயல்படுகிறது; குறை காண்பதற்கும் இடமளிக்காமல விநியோகிப்பதிலும் கவலை எடுத்துக்கொள்ளுகிறது.

கிடைப்பதைக் கொள்முதல் செய்கின்ற அளவுடனும் கழக அரசு மனநிறைவு பெற்று இருந்திடவில்லை; முன்னிலும் நெல் உற்பத்தியைக் கூடுதலாக்குவதிலும் கழக அரசு திட்டமிட்டுச் செயல்பட்டுவருகிறது.

தமிழக ஆட்சிப் பொறுப்பை ஏற்று ஏழே திங்கள் ஆனபோதிலும், உணவுத் துறையில் அடுத்தடுத்துத் தலைதூக்கிவந்துள்ள நெருக்கடியை இருந்த இடம் தெரியாமல் விரட்டியடிப்பதில், குறிப்பிடத்தக்க வெற்றியைக் கழக அரசு பெற்றிருக்கிறது. குறுகிய காலத்தில் கழக அரசு புரிந்துள்ள சாதனைகளில், இது தலைசிறந்த சாதனையாகும்.

அடுத்தது, ஒரு படி அரிசித் திட்டம். ரூபாய்க்கு ஒரு படி அரிசி என்பது, நகர ஏழை மக்களுக்குக் கிடைத்தற்கரிய இலாபமாகும். இதை ஏழை மக்களால்தான் நன்கு உணர்ந்துகொள்ள முடியும்.

இந்த ஒரு படி அரிதித் திட்டத்தைப் பாராட்டாதவர் எவருமில்லை. எதிர்பாராத இடங்களிலிருந்தெல்லாம் இத்திட்டத்துக்குப் பாராட்டுக் கிடைத்திருக்கிறது.

மற்றப் பண்டங்களின் விலையேற்றத்தைக் கட்டுப்படுத்துவதற்கும், ... றப்பதற்கும் ... அரிசித் திட்டம் சிறந்த ... உண... யை, இந்திய நிதி ... ன்றார்.

இருந்தாலும், இத்திட்டத்தி... ஏற்படக்கூடிய இழப்புத் தொகையை, தமிழக அரசுக்குக் ... உதவ இந்திய நிதி அமைச்சர் மறுத்துவருகின்றார். அ... ப் பொருட்படுத்தாமல், இத்திட்டத்திற்கான நிதி உத... பெறுவதற்குத் தமிழக முதலமைச்சர் அறிஞர் அண்ணா ... மீண்டும் மீண்டும் முயற்சித்து வருகின்றார்.

இந்த இடைத் தேர்தலில், கழக வேட்பாளர் மாறன் அவர்களை வெற்றிபெறச் செய்வதன்மூலம், தாம் செய்துவருகின்ற தவறை உணர்ந்து—தம் பிடிவாதப்போக்கை மா...றிக்கொண்டு—ஒரு படி அரிசித் திட்டத்துக்காகத் தமிழக அரசு செய்துவரும் மிகுதியான செலவுத் தொகையை ஏற்றுக்கொண்டு நிதி உதவிசெய்ய இந்திய நிதி அமைச்சருக்கு வாய்ப்பளிக்க வேண்டும் என, தென் சென்னை வாக்காளர்களை வேண்டிக்கொள்ளுகின்றோம்.

—[illegible]

'சிவப்பு நாடா'வுக்குச் சீட்டு!

ஒரிசா முதல்வரின் திட்டம்

கட்டாக், அக். 19—ஒரிசாவின் முதலமைச்சரான ஆர். என். சிங் தேவ், நிர்வாகத்திலுள்ள சிவப்பு நாடாவை வெட்டி எறியப் புதுத் திட்டம் போட்டிருக்கிறார்.

ஓர் அதிகாரியிடமுள்ள 'பைல்' நியாயமான கால வரம்பையும் மீறித் தாமதமாகுமானால், அவரது கையெழுத்தைச் சுற்றிச் சிவப்பு, வட்டம் போட்டு, அவர் முதலில் எச்சரிக்கப்படுவார்; அவர் மீண்டும் இதே குற்றத்திற்கு ஆளானால், மேற்சொன்ன முறை மீண்டும் கையாளப்படும்; அவர் மூன்றாவது முறையும் தவறினால் அவருக்குத் தண்டனை விதிக்கப்படும்.

இப்புதிய முறைப்படி, கூடுதல் பட்சமாக ஏழு நாட்களுக்குள் 'பைல்'கள் நகர்ந்துவிட வேண்டும்.

'மக்கள் தேவைகளை மனத்தில் கொண்டு செயலாற்றுகிறோம்'

'அரசியல் விழிப்புணர்ச்சியை தோற்றுவிப்பதில் வெற்றி பெற்று வருகிறோம்'

தி.மு.க. ஆட்சி பற்றி என். வி. நடராசன் விளக்கம்

"நாங்கள் பதவியில் இருந்துவருகிற கடந்த ஆறு மாத காலத்தில், தேர்தல் வாக்குறுதிகளை ஒன்றன்பின் ஒன்றாக நிறைவேற்றி வருகிறோம் என்பதுடன் அதைவிட கணிசமான அளவுக்குப் பல சாதனைகளைப் புரிந்து வருகிறோம்"

என்று, திராவிட முன்னேற்றக் கழக அமைப்புச் செயலாளர் திரு. என். வி. நடராசன் எம்.எல்.சி. அவர்கள், யு. பி. எஸ். நிருபருக்கு அளித்த பேட்டியில் கூறினார்.

படி அரிசித் திட்டத்தைப் பற்றி திரு. என். வி. நடராசன் குறிப்பிட்டதாவது:—

"ரூபாய்க்கு ஒரு படி அரிசித் திட்டம், தி. மு. கழகத்தின் தேர்தல் அறிக்கையில் குறிப்பிடப்படவில்லை; ஆனால், இத்திட்டத்தை நிறைவேற்ற வேண்டுமென்பதில் அண்ணா அவர்கள், மிகுந்த அக்கறை கொண்டிருந்தார்.

அவர் மேலும், சாதனைகளை விளக்கியதாவது;—

"சென்னை மாநிலத்தின் பெயரை 'தமிழகம்' என்று மாற்றியது தி. மு. கழத்தின் மற்றொரு சாதனையாகும்.

விருதுநகரில் வாழ்ந்த காங்கிரஸ்காரர் திரு. சங்கரலிங்கனார் 'தமிழ்நாடு' பெயர் மாற்றத்திற்காக தமது உயிரையே தியாகம் செய்தார்; தி.மு.க. எதிர்ப்பாளர்கள் செய்யத்தவறியதை நாங்கள் செய்துவிட்டோம்.

மக்களின் தேவைகள் என்ன என்பதைத் தி. மு. கழகம் மனதில் கொண்டு, செயலாற்றிவருகிறது.

மக்களின் நலனுக்கான காரியங்களைச் செய்ய தி. மு. கழகம் எப்போதும் தவறியதில்லை.

அரசாங்கப் பஸ்களில் கட்டணம் குறைக்கப்பட்டது; காங்கிரசு ஆட்சியில் இருந்ததைவிட, தற்போது அரசு பஸ் போக்குவரத்து பிரபலமாக இருக்கிறது.

கோயம்புத்தூரில் தொழிலாளர் சிக்கலை முதலமைச்சர் அண்ணா தீர்த்தவிதம்—என்.ஜி.ஓ.-க்களின் கிராக்கிப் படியை உயர்த்தியது—ஆகியவை, மக்களின் மனநிறைவுக்காகத் தி. மு. கழகம் மேற்கொண்ட முயற்சிகளாகும்.

கடந்த சில மாதங்களாகவே பதவியில் இருந்தபோதிலும், திராவிட முன்னேற்றக் கழகம், தனக்குச் சாதகமாக அரசியல் விழிப்பு உணர்ச்சியைத் தோற்றுவிப்பதில் வெற்றி பெற்றிருக்கிறது.

"நாட்டை எதிர்நோக்கியுள்ள மொழிச் சிக்கலில் திட்டவட்டமான கருத்தைத் தெரிவித்ததும் திராவிட முன்னேற்றக் கழகமே."

ஆட்டைக் கடித்து மாட்டைக் கடித்து......!

செங்காவலர் படை செஞ்சீனத் தூதுவர்கள் மீதும் பாய்கிறது!

வெளிநாடுகளில் வேண்டுமென்றே கலகம் விளைவித்து வீரர்களாகப் பீகிங் திரும்ப முயலுகின்றனராம்

இரகசியங்கள் அங்கிருந்தே அம்பலத்துக்கு வருகி...

"வெளிநாடுகளில் வேண்டுமென்றே கலகம் புரிகின்றனர்" என, சீனத் தூதுவர்களை, சீன செங்காவலர் படையின் பிரசுரம் ஒன்று கண்டித்திருக்கிறது!

"'வீரர்'களாகப் பீகிங் திரும்புவதற்குச் சீனாவின் தூதுவர்கள், வெளிநாடுகளில் திட்டமிட்டுக் கலகங்கள் ... உண்டாக்குகின்...."

என, மா சே... உருவாக்கிய செங்காவலர் ப..., அந்தப் பிரசுரத்தில் குற்றஞ்சாட்டியிருக்கிறது

"அரசியல் விளம்பரத்துக்காக அயல்நாடுகளிலுள்ள சீனத் தூதுவர்கள் வீண் புரளிகளை எழுப்பி, வேண்டுமென்றே காயங்கள் — தாக்குதல்களைப் பெற்று புகழ்பெற்றுத் திரும்பி வர நினைக்கிறார்கள்"

என, சீன வலதுசாரி நாளிதழ் ஒன்றில் இடம்பெற்றுள்ள அந்தக் கட்டுரையில், சுட்டிக்காட்டப்பட்டிருக்கிறது.

முதலில் அந்தக் கட்டுரை, செங்காவலர் படையின் சார்பாக வெளிநாடுகளில் படித்துத் திரும்பிய மாணவர்களால் எழுதப்பட்டு—சீன வெளிவிவகாரத் துறையின் அதிகாரபூர்வமான நாளிதழான 'ரெட் பிளாக்' ஏட்டில் வெளியாயிற்று.

திருச்சி மாவட்ட சீரணியின் சீரிய பணி

புதுக்கோட்டையிலிருந்து 10 மைல் தூரத்திலுள்ள வயலோகம் என்ற கிராமத்தையொட்டிய காட்டுப் பகுதியில், தமிழக அரசின் முயற்சியால் சுமார் 3,500 ஏக்கர் பரப்பளவுள்ள காட்டுப் பகுதியை அழித்துக் கழனியாக்கும் சீரிய பணி, கடந்த சில நாட்களாக சிறப்பாக நடைபெற்று வருகிறது.

இதில், புதுக்கோட்டை கோட்டத்தைச் சேர்ந்த சுமார் 300 சீரணித் தொண்டர்கள், மூன்று பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டு, மூன்று நாளைக்கு 100 பேர் வீதம் சங்கிலித் தொடர்போல் பணி புரிந்துவருகிறார்கள்.

மேற்படி சீரணிப் படையில் பெரும்பாலும் பஞ்சாயத்து யூனியன், நகராட்சிப் பள்ளி ஆசிரியர்கள் பங்கெடுத்துக் கொண்டு, நெற்றி வியர்வை நிலத்தில் விழ பாடுபடுவது குறிப்பிடத்தக்கதாகும்.

மேற்படி பணியின் ஓர் அம்சமான சுமார் 120 அடி நீளமுள்ள கண்மாய் (ஆயக்கட்டு) வெட்டும் வேலையில் 15—10—67 அன்று புதுக்கோட்டை நகர மன்ற தி. மு. கழக உறுப்பினர்கள் எம். ஷேக் தாவுத், எச். தங்கசாமி, எஸ். ரங்கசாமி, பி. வாசுதேவன், எம்.வி. பதி ஆகியோர் பங்கெடுத்துக் கொண்டு பணிபுரிந்தது, மற்றவர்களின் உணர்ச்சியைத் தூண்டுவதாகவும், ஊக்கமளிப்பதாகவும் இருந்தது. பணிகள் தொடர்ந்து நடைபெற்றுவருகின்றன.

தவணை முறை

வியாபாரத்துக்கு ஊக்கம்!

சட்டம் கொண்டுவருகிறது இந்திய அரசு!

தவணை முறை வியாபாரப் பெருக்கத்துக்கு ஊக்கம் அளிக்கும் வகையில், மத்திய அரசு, அடுத்த நாடாளுமன்றக் கூட்டத் தொடரின்போது மசோதா ஒன்று கொண்டுவரும் எனத் தெரிகிறது.

ஏற்கனவே இத்தொடர்பில் மசோதா ஒன்றினைத் தாக்கல் செய்திருக்கும் சுயேச்சை உறுப்பினர் யஷ்பால் சிங், அதனைத் திரும்பப் பெறுமாறு கேட்டுக்கொள்ளப்படுவார்.

இந்தப் புதிய மசோதாவை சட்டத்துறை அமைச்சகம் கொண்டுவரும்.

இராசபாளையத்தில் தீவிபத்து

கழகத் தோழர்களின் நிவாரணப் பணியும் காங்கிரசு ஏட்டின் புரளியும்

இராசபாளையம் சஞ்சீவிநாதபுரத்தில் 4—10—67 மாலை தீ விபத்து ஏற்பட்டு 65 வீடுகள் தீப்பிடித்து எரிந்து சாம்பலாகிவிட்டன; மற்றும் 70 வீடுகள் சேதமடைந்தன.

தீவிபத்து நடக்கும்போது இராசபாளையம் துணைத் தாசில்தார், வடக்குப் போலீசு நிலைய சப்-இன்ஸ்பெக்டர், மற்றும் பல அதிகாரிகள், கழகத் தொண்டர்கள், பொதுமக்கள் அனைவரும் தீயை அணைக்கும் பணியில் தீவிரமாக ஈடுபட்டனர்.

இரவு 9-மணிக்கு பாதிக்கப்பட்ட மக்களுக்கு நகர் தி. மு. கழகம் இரவு உணவு அளித்தது. மேலும், நகரில் துண்டேந்தி பண வசூல் செய்து மறுநாள் காலையில் பாதிக்கப்பட்ட மக்களுக்காக 75 படி அரிசி சமையல் செய்து சாப்பாடும், மதியம் 12 மணிக்கு குழந்தைகளுக்கு இட்லி—தோசையும் வழங்கப்பட்டது.

இந்த நிகழ்ச்சிகள் அனைத்தும் அதிகாரிகளுக்கும், பொதுமக்களுக்கும் நல்ல முறையில் தெரியும்.

ஆனால், காங்கிரசு ஏடு ஒன்றில் கழகக் காலிகளால் தீவைக்கப் பட்டதாகப் பொதுமக்கள் பேசுவதாகச் செய்தி வெளிவந்திருக்கிறது; காங்கிரசின் கைதேர்ந்த புளுகுச் செய்தியாகும் இது!

"வெளிவந்துள்ள அச்செய்... ஒரு வார காலத்தில் சம்பந்... ஆசிரியர் வருத்தம் தெரி... விட்டால் வழக்குத் தொட... " என்று நகரக் கழகச் செய...ளர் இரா. த. இராமச்சந்திரன் ...றிவிக்கிறார்.

கோவையில் தீ விபத்து

பாதிக்கப்பட்டவர்களுக்குக் கழகத் தோழர்கள் உதவி

கோவை நகர 18, 19-வது வட்டாரத்தில் ஏழைமக்களும், கூலி வேலை செய்பவர்களும், முஸ்லிம் பெருமக்களும் வாழும் மகுதியான வின்செண்ட் ரோடில், 11—10—67 மாலை 4-மணியளவில் தீடீரெனத் தீப்பிடித்து சுமார் 150 குடிசைகளுக்குமேல் தீக்கிரையாயின.

செய்தி அறிந்தவுடன் 18, 19-வது வட்டாரக் கழகத் தோழர்கள் சைதப்பா, தமீம், மைதீன், மயில்சாமி, இராமகிருஷ்ணன், நகரச் செயலாளர் ப. கோபால், பொருளாளர் பேச்சிமுத்து, பி. எஸ் சானகிராம், நகர மன்ற உறுப்பினர் ந. சுப்பிரமணியம், கா.பெ காளிமுத்து, மு. நாராயணசாமி, பழனிச்சாமி, ந. சுந்தரம், முஸ்லீம் லீக் நகர் மன்ற உறுப்பினர் ஜபார் உள்ளிட்ட லீக் தோழர்கள்—கழகத் தோழர்கள் தீயை அணைக்கும் பணியில் ஈடுபட்டனர்; மாலை 9-30 மணிக்கு தீ முற்றிலும் அணைக்கப்பட்டது.

நகர் மன்றத் தலைவர் சி. பி. நஞ்சப்பா, ஆணையாளர் ரங்க வடிவேல், சுகாதார அதிகாரி ஆகியோர் வந்து பார்வையிட்டு ஆவன செய்து வீடிழந்து வாடும் மக்களுக்கு ஆறுதல் கூறியதுடன், தங்குவதற்கு நகராட்சிப் பள்ளியில் ஏற்பாடுகள் செய்தனர்.

நகராட்சியின் சார்பில் உணவு ஏற்பாடும் செய்யப்பட்டு இருக்கிறது.

நகர தி. மு. கழகம், பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணம் அளிக்கும் வகையில் வேண்டியவைகளை செய்வதோடு மாவட்டக் கலெக்டருடன் தொடர்புகொள்ளப்பட்டும் இருக்கிறது. கோவை நகர மக்கள் உதவி செய்யுமாறு கோரப்பட்டுள்ளனர்,

25,000 டன் அரிசி கொள்முதல்!

சென்னை, அக். 17—

தஞ்சை மாவட்டத்தில் நடப்பு குறுகிய கால பயிர் அறுவடையிலிருந்து 4 இலட்சம் டன் அரிசி கொள்முதல் செய்ய முடிவு செய்யப்பட்டிருக்கிறது.

இதில் சுமார் 25 ஆயிரம் டன் அரிசி இதுவரை கொள்முதல் செய்யப்பட்டுள்ளது; 19 ஆயிரம் டன் அரிசி பற்றுக்குறைப் பகுதிகளுக்கு அனுப்பப்பட்டுவிட்டது.

வேலியே வேலியை தாண்டியது!

பெர்லின் சுவருக்கு அருகில்—கிழக்கு ஜெர்மனிப் பகுதியில் காவலுக்கு வைக்கப்பட்டிருந்த 21 வயது காவல்காரர் ஒருவரே, சுவரைத் தாண்டிக் குதித்து மேற்கு பெர்லினில் தஞ்சம் புகுந்திருக்கிறார்!

இந்த நிகழ்ச்சியினை, உடன் இருந்த மற்ற காவலாளிகள் யாரும் கண்டுபிடித்துத் தடுத்து நிறுத்த முடியவில்லை!

கிழக்குப் பெர்லினிலிருந்து மேற்குப் பெர்லினுக்கு—உயிரை மறந்து — பொதுமக்கள்தான் தப்பித்துக்கொண்டு ஓடும் சம்பவங்கள் இதுவரை நடைபெற்றிருக்கின்றன!

காவலாளியே தப்பித்துச் சென்றிருக்கும் இந்த நிகழ்ச்சி, ஜெர்மனி பற்றிய செய்திகளுள் சுவையான ஒன்றாகும்!

காங்கிரசார் கூற்று--- நகைச்சுவை விருந்து!

"நாங்கள் ஏதாவது கேட்டால், 'ஏன் கோபிக்கிறீர்கள்?'" என்று கேட்கிறார் காமராசர்! நான் வேதாந்தி அல்ல; ஆனால் தூற்றுபவர்களைக் கண்டும் நான் கோபப்பட்டதில்லை; பரிதாபப்பட்டிருக்கிறேன்!

"சிரங்கு பிடித்த ஒருவர் நம்முன் வந்து கீறிக்கொண்டால், நமக்குக் கோபமா வரும்? 'போய், மருந்து போட்டுக் கொள்வதுதானே?' என்றுதான் சொல்வோம்—அனுதாபப்பட்டு! கீறிக் கொள்கிறாரென்றால், அவ்வளவு அரிப்பு என்று பொருள்!

"20 ஆண்டாக இவர்கள் நம்மை நடத்தியவிதம் தெரியாதா? அப்போதெல்லாம் வராத கோபமா, நமக்கு இப்போது வரப்போகிறது?

"போன தேர்தலில்கூட, நான் கழுதைமீது உட்கார்ந்திருப்பதுபோலப் படம் போட்டார்கள். எனக்குப் பக்கத்திலே காயிதே மில்லத் அவர்களும், அடுத்து இராஜாஜியும் அக்கழுதையின் மீதிருப்பதாகச் சுவரொட்டி போட்டு ஊர் ஊராக மேடையில் — நான் பேசிய இடமெல்லாம் என் கண்ணுக்குத் தெரியும் தூரத்தில்—ஒட்டி வைத்தார்களே!

"நான் இ... னேன்—'... தற்கு உங... பெரிய கே... ...த' என்று!

"'எதற்காக அப்... ட்டி ருக்கிறார்கள் ... இவர்களிடமுள்ள ... யைப் பிடிக்க இந்தக் ...கழுதை போதும்' என்றார் ...ராஜாஜி!

"இப்படிக் காங்கிர... காரர்கள் சொன்னவற்றை... ல்லாம், நகைச்சுவையாக... நாங்கள் எடுத்துக் கொண்...ோம்!"

--அறிஞர் அண்ணா

(திருவல்லிக்கேணி கூட்டத்தில்)



டிவிஎஸ் டெலிவரி வான் பாடி

எண்ணெய்ச் செலவும் டயர் தேய்மானமும் குறைவு. பல்லாண்டுகள் உழைக்கும். உறுதியானது.

பாடிகள் கட்டுவதில் சுமார் நாற்பது ஆண்டுகள் அனுபவமுள்ளது டிவிஎஸ். அவரவர் தேவைக்கேற்ப எந்தவிதமான சேஸிஸ் மீதும் லேசான, உழைப்பிற்கு உறுதியான பாடிகளைத் தயாரிக்கிறது டிவிஎஸ்.

TVS

டிவிஎஸ் — இந்தியாவிலேயே பாடிகள் கட்டுவதில் மிகப்பெரிய ஸ்தாபனம்

சுந்தரம் இண்டஸ்ட்ரீஸ் பிரைவேட் லிமிடெட்—மதுரை (டிவிஎஸ் ஸ்தாபனம்)

51/4257

'வேட்டையாடும் வழக்கத்தைக் கைவிடுக'

வனவிலங்குகள் பாதுகாப்பு விழாவில் அமைச்சர் கோவிந்தசாமி வேண்டுகோள்

சென்னை, அக். 18—

தமிழக அரசினரின் வனவிலங்குகள் பாதுகாப்பு வாரம், கிண்டி குழந்தைகள் பூங்காவில், வேளாண்மை அமைச்சர் ஏ. கோவிந்தசாமி அவர்கள் தலைமையில்—திரு. க. அதிவழகன் எம்.ஏ., எம்.எல்.சி., முன்னிலையில் நடைபெற்றது.

அமைச்சரை வரவேற்ற தமிழ்நாடு வனத்துறை தலைமை அதிகாரி திரு. ஜெய்தேவ் பேசினார்.

தமிழ்நாடு விளங்குகள் பாதுகாப்பு அதிகாரி எம். ஏ. பாட்சா நன்றி கூறினார்.

வனவிலங்குகளைப் பாதுகாக்க வேண்டியதன் அவசியத்தைப் பற்றியும், அவற்றால் நாட்டுக்குச் சிறப்பு வளரும் வகை பற்றியும் பேசிய அமைச்சர் கோவிந்தசாமி அவர்கள், 'வன விலங்குகளை வேட்டையாடும் வழக்கத்தைக் கொண்டிருப்பவர்கள் அதைக் கைவிட வேண்டும்' என்றும் வேண்டிக்கொண்டார்.

பேராசிரியர் க. அறிவழகன் பேசுகையில் ... காலங் ... எந்த அள ... பாதுகாப் ... என்ப... தையும், விலங்... ந்தரமான வாழ்க்கை முறையினால் நாம் உணர்ந்துகொள்ள வேண்டிய பாடல்கள் பல உண்டு என்பதையும், எடுத்துக்காட்டி, வன விலங்குகளைப் பாதுகாக்கத் தமிழக அரசு மேற்கொண்டுள்ள திட்டத்தைப் பற்றியும் எடுத்துக் காட்டினார்.

விழாவின் இறுதியில், முத்தழகர் நாடக மன்றத்தினரின் 'இராணி வேட்டை' எனும் சிறு நாடகம் நடைபெற்றது.

வன விலங்குகளைப் பாதுகாக்க வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தி கருத்தைக் கவரும்—முத்தழகரின் வசனங்களால் — நெஞ்சைக் கவரும் நடிப்பால் நாடகம் சிறப்பாக இருந்தது.

இராசபாளையத்தில் அமைச்சர் செ. மாதவன்

தீவிபத்தால் பாதிக்கப்பட்டோருக்கு ஆறுதல்

6—10—67 காலை 10-30மணிக்கு இராசபாளையம் வந்த அமைச்சர் மாதவன், அங்கு சஞ்சீவிநாதபுரத்தில் தீவிபத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளைப் பார்வையிட்டு—மக்களுக்கு ஆறுதல் கூறிவிட்டு—தளவாய்புரம் நிகழ்ச்சிகளில் கலந்துகொள்ளப் பயணமானார்.

தளவாய்புரம் பகுதிகளில் ஏற்பாடு செய்யப்பட்ட நிகழ்ச்சிகளை முடித்துவிட்டு நண்பகல் 1மணிக்கு அசோக் திரைப்பட அரங்கில் எம்.ஜி.ஆர். படிப்பகத்தாரால் ஏற்பாடு செய்யப்பட்ட வரவேற்பு விழாவில் கலந்துகொண்டார்.

வரவேற்பு விழாவுக்கு தோழர் முகிலன் தலைமைதாங்கினார்; நகரச் செயலாளர் இரா. த. இராமச்சந்திரன், தா. கிருஷ்ணன் எம்.ஏ., எம்.பி., மாவட்டச் செயலாளர் எஸ். எஸ். தென்னரசு ஆகியோர் கருத்துரை வழங்கினர்.

மணி—சாமி குழுவின் இசை நிகழ்ச்சி நடைபெற்றது.

நகர்க் கழக அவைத் தலைவர் மு. வ. கந்தசாமி, அமைச்சருக்கு வரவேற்பு மடல் வாசித்தளித்தார். நகரில் உள்ள பல அமைப்புகளின் சார்பில் கைத்தறி ஆடைகளும், மாலைகளும் அணிவிக்கப்பட்டன.

அமைச்சர் மாதவன் நன்றி தெரிவித்துப் பேசுகையில், கழக அரசின் சாதனை பற்றியும், காங்கிரசுக்காரர்களின் அர்த்தமற்ற பேச்சுக்கு மறுப்புக் கூறியும் உரையாற்றினார்.

அதன் பின், நெசவாளர்கள் கூட்டுறவு சங்க வரவேற்பு—முடிதிருத்துவோர் கூட்டுறவுச் சங்க வரவேற்பு — ஆகியவைகளில் கலந்துகொண்டார்.

மேற்கண்ட நிகழ்ச்சிகளில், மாவட்டச் செயலாளர் தென்னரசு, தா. கிருஷ்ணன் எம்.ஏ., எம்.பி., சோணையா, மாங்குடி மதியழகன் ஆகியோர் கலந்துகொண்டனர்.

சென்னை 95-வதுவட்ட கலைஞர் கருணாநிதி மன்றம்

சென்னை 95-வது வட்ட கலைஞர் கருணாநிதி மன்ற நிர்வாகிகள் தேர்தல், 10—10—67 அன்று கிளைக் கழகச் செயலாளர் தி. ஆதி நாராயணன் தலைமையில் நடைபெற்றபோது, பி. பழனியப்பன் தலைவராகவும், சி. தியாகராசன் செயலாளராகவும், ஆர். கந்தசாமி துணைச் செயலாளராகவும், வி. எஸ். மணி பொருளாளராகவும், மற்றும் 7 பேர் செயற்குழு உறுப்பினர்களாகவும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

சென்னை 98-வதுவட்ட மதியழகன் மன்றம்

25—9—67–ல், சென்னை 98-வது வட்டக் கிளையின் துணைச் செயலாளர் கி. பா. அரசு அவர்களை ஆணையாளராகக் கொண்டு மதியழகன் மன்றத்தின் நிர்வாகிகள் தேர்தல் நடைபெற்றது; தேர்ந்தெடுக்கப்பட்டோர் :—

அவைத் தலைவர் : மா. சாமிநாதன்; செயலாளர்: கி. அரசு; துணைச்செயலாளர்: இரா. உலகநாதன்; பொருளாளர் : பா. மோகன்; 21 பேர் செயற்குழு உறுப்பினர்கள்.

சென்னை 6-வது வட்ட எம்.ஜி.ஆர். மறுமலர்ச்சிமன்றம்

சென்னை 6-வது வட்டத்தில் எம். ஜி. ஆர். மறுமலர்ச்சி மன்றம் அமைத்து 24—9—67 அன்று வட்டச் செயலாளர் க. கணேசன் தலைமையில் நிர்வாகிகள் தேர்ந்தெடுக்கப்பட்டனர் :—

தலைவர் : த. லோகநாதன்; செயலாளர் : பி. எஸ். இராதாகிருட்டினன்; துணைச் செயலாளர் : கே. கணேசன்; பொருளாளர் : நா. சோமசுந்தரம்; ஏழு பேர் செயற்குழு உறுப்பினர்கள்,

மேலே வானம் -- கீழே பூமி

விண் சுருங்குகிறது--
விஞ்ஞானம் வளருகிறது!

சுக்கிரனில் இரஷ்யக் கப்பல்

விண் வெளிக் கப்பல் ஒன்றினை சுக்கிரன் கிரகத்தில் இறக்கியிருப்பதன் மூலம், சோவியத் யூனியன், சரித்திரப் பிரசித்தி பெற்ற மற்றொரு முதல் விஞ்ஞான சாதனையினைச் செய்து காட்டியுள்ளது!

'சுக்கிரன்-4 என்று பெயரிடப்பட்டுள்ள அக்கப்பல், எதிர் பார்த்தபடி கிரகத்தில் இறங்கி அங்குள்ள தகவல்களைப் பூமிக்கு அனுப்பிக்கொண்டிருக்கிறது!
சந்திரனை நீக்கிய மற்ற விண்வெளிக் கிரகங்களிலிருந்து மனிதன், தகவல்களை அறிவது இதுவே முதல் தடவை!

பூமிக்கு வெகு அருகிலுள்ள கிரகம் சுக்கிரன் ஆகும். இரஷ்ய விண்வெளிக் கப்பல் பூமியிலிருந்து சுமார் 49.5 மில்லியன் (ஒரு மில்லியன் பத்து இலட்சம்) மைல் உயரத்தில் சுக்கிரனில் இறங்கியுள்ளது!

உலகுக்கு இந்தச் சாதனையை வழங்கியிருக்கும் இரஷ்யச் செய்தி நிறுவனம் 'டாஸ்', அரசியல் எல்லையைக் கடந்து, உலக நாடுகளின் மகிழ்வினையும், பாராட்டுதல்களையும் சோவியத் மக்களுக்குத் திரும்பப் பெற்றுக் கொடுத்துள்ளது.

" அதிசயிக்கத்தக்க வெற்றி; மேலும் ஆராய்ச்சிக்கு உதவும் சாதனை " என, அமெரிக்க விஞ்ஞானிகள் பாராட்டியுள்ளனர்!

நடக்க இருப்பவை - பொதுக்கூட்டங்கள்

20--10--67

கீரனூர்
எம்.ஜி.ஆர். மன்றச் சார்பில் மாலை 3 மணிக்கு பொதுச் சாவடித் திடலில்; தலைவர்: பி. கே. சின்னதுரை; பேசுவோர்: எம். ஆர். ஆர். வாசு, கே. குமரவேல், அ. சலாவுதீன், மு. சிவா, பி. சி. முத்துக்குமார், எம். எம். அயூப்கான்.

திருத்தங்கல்
கலைஞர் கருணாநிதி மன்றச் சார்பில் இரவு 7 மணிக்கு பன்னீர் செல்வம் திடலில்; தலைவர்: எப். எம். சூசை; பேசுவோர்: சி. தமிழரசி பி.ஏ., எஸ்.பி. மணியம், நா.ப. அண்ணாமலைச்சாமி, ஏ. எஸ். கனி.

விருதம்பட்டு
தி. மு. க. சார்பில் மாலை 6-மணிக்கு; தலைவர்: வி. க. கண்ணன்; பேசுவோர்: அமைச்சர் சாதிக்பாட்சா, ஏ. வி. பி. ஆசைத்தம்பி எம்.எல்.ஏ., மா. பா. சாரதி எம்.எல்.ஏ., ஜி. நடராசன் எம்.எல்.ஏ., பி. கே. முனுசாமி, தோப்பூர் திருவேங்கடம் எம்.ஏ., மு. கோதண்டன்.

திண்டுக்கல்
தி. மு. க. சார்பில் இரவு 7-மணிக்கு அங்கு விலாஸ் அருகில்; தலைவர்: மா. தங்கவேலர்; பேசுவோர்: கே. எஸ். சந்தானம் எம்.சி., பாலமுருகேசன் பி.ஏ.பி.எல்., மு. காதர்சா பி.ஏ., க. வே. விக்கிரமாதித்தராசன், என். முத்து.

சென்னை 35-வது வட்டம்
தி. மு. க. ஆதரவாளர்கள் சார்பில் இரவு 7-மணிக்கு மங்களபுரி கிருஷ்ணதாஸ் ரோட்டில்; தலைவர்: டி. முனுசாமி; பேசுவோர்: அமைச்சர் சத்தியவாணிமுத்து; க. வேழவேந்தன் எம்.எல்.ஏ., ஜீவா. கலைமணி பி.ஏ., கோ.லோகநாதன் எம்.சி., ஆர்.டி. அரசு, ஏ. கே. சாமி.

21--10--67

லால்குடி
பொன்னம்பலனார் படிப்பகச் சார்பில் மாலை 6-30 மணிக்கு தெற்கு சீனிவாசபுரம் தெருவில்; தலைவர்: ஆ. துரைராசு: பேசுவோர்: வெ. கண்ணன், மு. க. து. நடராசன் எம்.எல்.ஏ., புலவர் அருணா, எஸ். கே. சிங்காரம், ப. சம்பந்தம் பி.ஏ., மு. இலக்கையன், எல். பி. இரத்தினம்.

கொரடாச்சேரி
தி. மு. க. சார்பில் இரவு 7-மணிக்கு காந்தி பூங்காவில்; தலைவர்: இரா. கிருட்டினசாமி; பேசுவோர்: அமைச்சர் இரா. நெடுஞ்செழியன், மன்னை ப. நாராயணசாமி, சி. கிருட்டினமூர்த்தி எம்.எல்.ஏ., கா. சுப்ரவேல் எம்.பி., கே. வி இராமையா, அ. நடராசன், தி. கோவிந்தராசு.

சதானந்தபுரம்
தி. மு. க. சார்பில் மாலை 6-மணிக்கு கிராமப் பொதுத் திடலில்; தலைவர்: து. இராசரத்தினம்; பேசுவோர்: சி. தமிழரசி பி.ஏ., எஸ். பி. மணியம், வே. கருணாகரன், ஏ. எஸ். கனி, பா. சுப்பிரமணியம்.

சிவகாசி
எம். ஜி. ஆர். மன்றச் சார்பில் இரவு 7-மணிக்கு கீரைக்காரன் திடல்; தலைவர்: என். கருப்பசாமி; பேசுவோர்: சி. தமிழரசி பி.ஏ., எஸ். பி. மணியம், ஏ. துரைக்கண்ணன், கே. வி. கே. இராசன்.

படி அரிசித் திட்டத்துக்குப்

பாதகம் ஏற்படாதிருக்க..!

" படி அரிசித் திட்டம் கொண்டு வந்தோமே—அது சதியா?

" சென்னைக்கு குடிநீர்த் திட்டம் போட்டோமே—அது அக்கிரமமான செயலா?

" கூவம் நதியைச் சீர்திருத்தத் திட்டமிட்டு வேலை செய்கிறோமே—அது தவறான செயலா?

" 'ஒரு படி அரிசி நான் போடுகிறேன் என்றால், காங்கிரசுக்காரர்கள், 'இரண்டு படி போடுகிறோம்' என்று எழுதித் தரட்டும்—பதவியை விட்டு விலகுகிறேன்' என்று நான் முன்பு பேசினேன்; அதற்குக் காமராசர், 'நானா படி அரிசித் திட்டம் கொண்டு வருகிறேன் என்று கூறினேன்; என்னால் அது முடியாது' என்று கூறுகிறார்!

" அப்படியானால், என்னையும் படி அரிசி போடவிடமாட்டீர்கள்! நீங்களும் போடமாட்டீர்கள்! ஆனால், உங்களுக்கு ஓட்டளிக்க வேண்டுமென்றால், எதை வைத்து மக்கள் ஆதரிப்பார்கள்?

" இந்த இடைத் தேர்தலில் நாம் தோற்றால், அதை வைத்துக்கொண்டு டில்லி சென்று, 'படி அரிசித் திட்டத்திற்கு ஆதரவு இல்லை' என்று கூறி, 'படி அரிசித் திட்டத்தை நிறுத்து' என்று டெல்லியை உத்தரவிடச் செய்யும் நோக்கத்துடன்தான் காங்கிரசுக்காரர்கள், இந்த இடைத் தேர்தலில் ஈடுபடுகிறார்கள்!

" ஆகவே அதை உணர்ந்து—வாக்காளர்கள் விழிப்படைந்து தி. மு. கழகத்தை ஆதரிக்க வேண்டும்."

--அறிஞர் அண்ணா
(தேனாம்பேட்டை கூட்டத்தில்)

புலவர் அறிவுடைநம்பி

சுற்றுப்பயணம்

அக். 19: பொள்ளாச்சி; 20: பொள்ளாச்சி வட்டம்; 21: திருவில்லிப்புத்தூர்; 22: மதுரை 31-வது வட்டம்; 23: ஆண்டிப்பட்டு—கன்னியப் பிள்ளைப்பட்டி; 25, 26, 27: சென்னை; 28: ஆற்காடு (வ. ஆ.); 29, 30: பெங்களூர்.

நவ. 2, 3, 4, 5: சென்னை; 5: வாணியம்பாடி; 6, 7: சென்னை; 8: நாச்சியார்கோவில்; 11: இடைப்பாடி; 12: ஓமலூர்; 13: காரிப்பட்டி.

செஞ்சீனாவின் அரசியல் தீபாவளி!

முன்பு அணு குண்டு--இன்னும் சில நாட்களில் ஹைட்ரஜன் குண்டு!

இரஷ்ய விழாவுக்குப் போட்டியாக பீகிங் விஞ்ஞானிகள் தீவிரம்

1964-ம் ஆண்டு அக்டோபர் தி[illegible] அணு குண்டுச் சோதனையை நிகழ்[illegible] மீண்டும் அடுத்த மாதம் மு[illegible] (ஹைட்ரஜன்) குண்டு [illegible] நகழ்த்தும் என ஜப்பானிய அரசியல் வட்டாரங்களில் நம்பிக்கை தெரிவிக்கப்பட்டிருப்பதாக டோக்கியோ செய்தியொன்று கூறுகிறது.

முதல் அணு குண்டு சோதனைக்குப் பின்னர், செஞ்சீனா, ஏறக்குறைய ஆறு மாதங்களுக்கு ஒருமுறை அணுகுண்டு சோதனைகளைத் தொடர்ந்து நடத்தி வந்திருக்கிறது.

'அடுத்த மாதத்தில் நடைபெறலாம்' என நம்பப்படும். இந்த நீர்வளிக் குண்டு சோதனை, இரஷ்யாவில் நவம்பர் ஏழாம் நாள், நடைபெறவிருக்கும் 50-வது புரட்சி ஆண்டு விழாவினுக்குப் போட்டியாகத் தயார் செய்யப்படுகிறது என யூகிக்கப்படுகிறது.

கல்விக் கூடங்களில் இரத்தக்கறை!

மாணவர் கிளர்ச்சி தொடர்கதையாகிறது!

போலீசுத் தாக்குதலுக்கு ஆசிரியர்களும் 'இரை'யானார்கள்!

" இனியும் உங்கள் கிளர்ச்சிகள்—வேலைநிறுத்தங்கள் நீடித்தால், இந்தப் 'படிப்பு ஆண்டு' முழுவதும் பாழாகி விடும்; இந்த ஆண்டின் துவக்கம் முதலே கணிசமான நாட்கள் இந்த வகையில் வீணாகியிருக்கின்றன; ஆசிரியர்கள்—மாணவர்கள்—பெற்றோர்கள் ஆகிய முத்தரப்பினரும் நிலைமையை உணர்ந்து, அமைதி உருவாவதற்கு வழிகோல வேண்டும் "

என்ற கேரளக் கல்வி அமைச்சர் முகமது கோயாவின் அறிக்கையை, கடலாழத்தில் புதைக்கும் அளவுக்கு மாநிலமெங்கணும் மாணவர் வேலைநிறுத்தங்கள்—ஊர்வலங்கள்—கிளர்ச்சிகள் பற்றியும், அதனை அடக்கப் போலீசார் மேற்கொண்ட தடியடிப் பிரயோகம் பற்றியும் செய்திகள் வந்தவண்ணமிருக்கின்றன.

" ஆர்ப்பாட்டங்கள், கிளர்ச்சிகள் ஆகியவற்றினை அடக்கப் போலீசார் இதனைவிட வன்மையான வன்முறையைப் பிரயோகிக்க முடியாது " என்று வியக்கும் வகையில் கேரளப் போலீசுத்துறை, தங்கள் 'திறமை'—'உழைப்பு' ஆகிய அனைத்தையும் கொட்டிக் காண்பித்திருப்பதாக இன்றைய காலைச் செய்திகள் தெரிவித்திருக்கின்றன.

கேரள மாநில கல்விக் கூடங்களின் சரித்திரத்தில், அக்டோபர் 18-ந் தேதியை, 'தடியடித் தினம்' என்று வர்ணிக்கும் அளவுக்கு ஆங்காங்கே உள்ள மாணவர்கள் பலத்த தடியடிப் பிர[illegible] களுக்கு ஆளாகியிருக்கின்[illegible]

குறிப்பாக எர்ணாகு[illegible] உள்ள செயிண்ட் ஆல்ப[illegible] கல்லூரி—மாணவர் விடுதிக் [illegible] டடங்களில், போலீ[illegible] கதவுகளை உடைத்து உ[illegible] நுழைந்து நடத்திய தடியடி[illegible] பிரயோகங்களின் விளைவாக, சுவர்களில் ஆங்காங்கே இரத்தக் கறைகள் நிறைந்து காணப்படுவதாகக் கூறப்பட்டிருக்கிறது.

தரைகளில், இரத்தத் தேக்கங்களே ஒரு சில இடங்களில் காணப்பட்டதாக, நேரில் கண்டவர்களின் தகவல்கள் தெரிவிக்கின்றன.

போலீசாரின் இந்த நடவடிக்கைகளைக் கண்டித்து, எர்ணாகுளத்தைச் சுற்றியுள்ள ஐந்து கல்லூரி முதல்வர்களின் கூட்டமொன்று தீர்மானம் இயற்றியிருப்பதோடு, தொடர்புடைய போலீசார்மீது ஒழுங்கு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்றும் அரசினரைக் கேட்டுக் கொண்டிருக்கிறது.

எர்ணாகுளம் நகராட்சியும் இது போன்ற தீர்மானம் ஒன்றை நிறைவேற்றியிருக்கிறது.

மாணவர் கிளர்ச்சியின் மூன்றாவது தினமான நேற்று நடந்த தடியடிப் பிரயோகங்களின் விளைவாக நூற்றுக்கு மேற்பட்ட மாணவர்களும், இரண்டு பேராசிரியர்களும் பலத்த காயத்துக்குள்ளாகியுள்ளனர்.

இரண்டு இடங்களில் போலீசார், கல்லூரிக் கட்டிடங்களுக்குள் நுழைந்து, தடியடிப் பிரயோகம் செய்திருக்கின்றனர்.

மாணவர்களைத் துரத்திச்சென்ற போலீசு அணி ஒன்று, தலைமை ஆசிரியையின் அறைக்குள்ளும் நுழைந்து தேடியிருக்கிறது!

முதலமைச்சர் நம்பூதிரிபாடு வீட்டின்முன் சத்தியாக்கிரகப் போராட்டம் நடத்தச் சென்ற மாணவர் அணியினைக் கைது செய்யப் போலீசார் கையாண்ட முறை அருவருப்புக்கும் பலத்த கண்டனங்களுக்கும் இடம் தந்திருக்கிறது.

" [illegible] கம்யூனிஸ்டுக் கட்சி [illegible] ப்பினர்கள், [illegible] யமைச்ச[illegible] இல்லத்தின் [illegible] ாராட்டம் [illegible] டத்த உரிமை [illegible] து; [illegible] னால், அதே [illegible] வர்கள், முதல[illegible] இல்லத்தின்முன் போ[illegible] நடத்த இத்தகைய அ[illegible] றயா?" என மாணவர்[illegible] ள் கேட்டிருக்கின்றனர்!

பல இடங்[illegible] ளில், முதலமைச்சரின் கொடும்[illegible] வி கொளுத்தப்பட்டு, அதன் [illegible] ம்பல், கடலில் கரைக்கப்பட்[illegible] க்கிறது!

காங்[illegible] சுக்கு ஆதரவு காட்டும் மாணவ[illegible] ள், பெரிதும் இப்போராட்டத்தில் ஈடுபட்டிருக்கின்றனர்!

கம்யூனிஸ்டு (மா) ஆதரவுள்ள மாணவர்கள், இதனின்றும் ஒதுங்கியிருப்பதாகக் கூறப்படுகிறது.

எனவே கிளர்ச்சிகளுக்கிடையே இருதரப்பினருக்கிடையேயும் மோதுதல்களும் நடைபெற்றிருக்கின்றன!

அண்மையில் போலீசுத் தாக்குதலினால் மாணவர் ஒருவர் சம்பவம் பற்றிய விசாரணை—மாணவர்கள் மீதான வழக்குகளைத் திரும்பப் பெறுதல் — வேலை நிறுத்தம் காரணமாக மூடப்பட்டிருந்த காலத்துக்குக் கல்லூரிக் கட்டணத்தைத் தள்ளுபடி செய்தல்—ஆகிய மாணவர்களின் கோரிக்கைகளைக் கேரள அரசு மறுத்ததன் விளைவாக இந்தக் கிளர்ச்சிகள் நடைபெற்று வருகின்றன.

[1-ம் பக்கத்தின் தொடர்ச்சி]

வித்தது; சட்ட—ஒழுங்கை அமுல்படுத்துவதில், அதிகாரிகளுடன் மக்கள் முழு மனத்துடன் ஒத்துழைக்க வேண்டுமென்று கோரிக்கை விடப்பட்டது.

1966 மார்ச் முதல் நாள் மிஜோ தேசிய முன்னணி கலகத்தில் ஈடுபட்டதற்குப் பிறகு, மிஜோ யூனியன் கட்சி இப்போதுதான் முதல் தடவையாக மாநாட்டைக் கூட்டியுள்ளது.

மாணவர் மன்றத்தில் அண்ணா படத் திறப்பு

சென்னை மாணவர் மன்ற நிலையத்தில் 20—10—67 மாலை 6-மணிக்கு அறிஞர் அண்ணாவின் படத் திறப்பு விழாவும், தமிழ்ப் போட்டித் தேர்வுகளின் பரிசளிப்பு விழாவும் நடைபெறும்; அறிஞர் அண்ணாவின் படத்தை அமைச்சர் மா. முத்துசாமி திறந்துவைப்பார்.

கலைக் குழு முகவரி:

அன்பில் தர்மலிங்கம் கலை மன்றத்தைச் சேர்ந்த முத்து — தனலட்சுமி குழுவினர் நிகழ்த்தும் 'மக்களாட்சி' எனும் கதம்பக் கலை நிகழ்ச்சி நடத்த விரும்புவோர் தொடர்புகொள்க:—

முத்து – தனலட்சுமி,
கீழ சுப்பிரமணியபுரம்,
இரயில்வே கிரவுண்டு, திருச்சி.

அ. தமிழரசு,
மேற்பார்வை எம். கணேசன்,
37, கன்னிமார்கோயில் தெரு,
கூனி பசார், திருச்சி-1.

பாலர் அரங்கம்

அக். 20, 21, 22-ந் தேதிகளில்
மாலை 4-மணிக்கு

டார்ஜானும்
நியூயார்க் வீரச் செயல்களும்

(எம்.ஜி.எம். முழு நீளப் படம்)

கட்டணம் வழக்கம்போல்

திராவிட முன்னேற்றக் கழகத்திற்காக, திரு. இரா. செழியன் எம்.ஏ., எம்.பி. அவர்களை ஆசிரியராகவும், வெளியிடுபவராகவும், அச்சிடுபவராகவும் கொண்டு, வழுதி அச்சகத்தில் (24, சூரியநாராயண செட்டித் தெரு, சென்னை-13) [illegible]